**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/22 | Village | : | |
| Prosecution witness | : | PW-11 | Taluk | : | |
| Name | : | **முருகேசன்** | Occupation | : | |
| Father Name | : | **உலகநாதன்** | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 08.07.2025**

**Accused present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் ஆடுதுறையில் காளியம்மன் கோவிலல் தெருவில் வசித்து வருகிறேன். நான் கல்லருக்கும் தொழில் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் வயல் பயர் வைத்துள்ளார்கள். இறந்துபோன பிச்சையன் என்பவரை தெரியும். அவர் மகன் சந்திரசேகரன் தெரியும் அவருக்கு நான் கல்லருத்து கொடுத்திருக்கிறேன். போலிஸார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. கபிஸ்தல் போலிஸ்போயிருக்கேனா என்றால் தற்போது போகவில்லை 5, 6 வருடத்திற்கு முன்பு போயிருக்கிறேன். நான் காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் சம்மனில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆகும். கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 26.04.22 அன்று போலிஸார் மாலை 3 1/2 மணிக்கு கபிஸ்தலத்தில் வைத்து 1ஆம் எதிரி ரமேஷ் போலிஸ் காவலில் எடுத்து விசாரித்தபோது நான் வாக்குமூலம் பதிவு செய்ய சாட்சியாக இருந்துவிட்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைபற்றுதல் மகசரிலும் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை மட்டும் ஒப்புகொண்டு கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தை

எதிரிக்கு பயந்து கொண்டு மறுக்கிறேன் என்றால் சரியல்ல. போலிஸார் விசாரிக்கவில்லை உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**